1986 மே 14]

போக்குவரத்து வளர்ச்சி நிதிக் கழகம்.

653—(*வினா எண் 4540) திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதிக் கழகம் முதலீடு பெறும் வழி என்ன ?

(ஆ) அவற்றிற்கு கழகம் செலுத்தும் வட்டி வீதம் என்ன ?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : (அ) பொதுமக்கள், நிறுவனங்கள், கம்பெனிகள் முதலானவர்களிடமிருந்து வைப்புத் தொகைகளை தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதிக் கழகம் ஏற்றுக்கொள்கிறது.

(ஆ) 14.5 சதவீதம் வட்டி அளிக்கிறது.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதிக் கழகம் பொது மக்களிடமிருந்து வைப்பு நிதி பெறும்போது அவர்களுக்கு என்ன சதவீதம் வட்டி கொடுக்கிறார்கள்? இக்கழகம் மற்றவர்களுக்கு கடன் வழங்கும்போது அவர்களிடமிருந்து என்ன வட்டி வசூலிக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, பொதுமக்களிடமிருந்து வைப்பு நிதியாக பெறும் தொகைக்கு நான் ஏற்கனவே சொன்னதுபோல் 14.5 சதவீதம் வட்டி கொடுக்கிறார்கள். இதிலே 2, 3 மூன்று முறைகள் இருக்கின்றன. மூன்று ஆண்டுகளுக்கு தொடர்ச்சியாக அந்த வைப்பு நிதியை வைத்தார்களானால் அதற்கு வட்டிவிகிதம் கொஞ்சம் கூடுதலாக இருக்கும். அதிலே பர்சென்டேஜ் என்று போடாமல், ஆயிரம் ரூபாய் செலுத்தினால் மூன்று ஆண்டு காலத்திற்கு அதை தொடர்ந்து வைத்திருந்தால் 1,540 ரூபாய் என்றும், இரண்டு ஆண்டுக்காலம் என்று சொன்னால் 1,285 ரூபாய் என்றும் ஒராண்டு காலத்திற்கு வைத்திருந்தால் 1,130 ரூபாய் என்றும் இப்படி பல வகையிலே இருக்கின்றன. இது மிக மிக உபயோகமான, மக்களுடைய வைப்பு நிதிக்கு, ஒரு தகுந்த வருமானத்தை ஈட்ட கூடியதாகக் கூட இருக்கிறது. இந்த நேரத்திலே இந்தக் கேள்விகூட மிக பயனுள்ள நேரத்தில் வந்திருக்கிறது. இதிலே பலபேர் டெபாசிட் செய்து பயன் அடைய வேண்டுமென்று கூட நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அதேபோன்று அவர்கள் திருப்பி கடனாக கொடுக்கிற இடத்தில் நம்முடைய போக்குவரத்துக் கழகங்களுக்கு அவர்கள் கொடுக்கிறார்கள். அவர்களிடத்திலே 16 சத

வீதம் பெறுகிறார்கள். அது சரியான விகிதமா, எவ்வளவு பெறுகிறார்கள் என்பதற்கான சரியான விளக்கம் என்னிடத்திலே இல்லை. ஆனால் 16 சதவீதம் என்று சொல்லியிருப்பதாக எனக்கு நினைவு. இவர்கள் கொடுப்பது 14.5 சதவீதம்.

போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் வேகத் தடைக் கருவி.

654—(*வினா எண் 5431) திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

போக்குவரத்துக் கழகங்களில் உள்ள பேருந்துகளில் தற்பொழுது ''வேகத்தடை கருவி'' பயன்படுத்தாமல் இருப்பதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேகத்தடைக் கருவிகள் அடிக்கடி பழுதடைந்துவிடுவதாலும், உதிரி பாகங்கள் கிடைக்காத காரணத்தாலும் போக்குவரத்துக் கழகங்களில் உள்ள பேருந்துகளில் வேகத்தடை கருவிகள் பெரும்பாலும் பொருத்தப்படாமல் இருக்கின்றன.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேகத்தடைக் கருவிகள் பொருத்தப் படாததால் இன்றைக்குப் பல விபத்துகள் நடப்பதை நாம் உணர்ந்து கொண்டிருக்கிறோம். இரண்டு தினங்களுக்கு முன்பாகக் கூட சைதை மர்மலாங் பாலத்தில் வேகமாக வந்த அந்த பஸ், கண்ட்ரோல் பண்ணமுடியாத காரணத்தால் ஆற்றுக்குள்ளே விழுந்து விட்டது. ஆகவே இப்படி அதிகமான வேகத்தில் வருகின்ற பல்லவன் போக்குவரத்து பேருந்துகளைக் கட்டுப்படுத்த வேகத்தடை இல்லையென்றாலும் பேருந்துகள் 40 கிலோ மீட்டர் வேகத்துக்கு மேல் செல்லமுடியாத வகையில் மாற்றம் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, எல்லா போக்குவரத்துக் கழகங்களினுடைய பேருந்துகளில் வேகக் கட்டுப்பாடு கருவிகள் இல்லையென்று நான் சொல்லவில்லை. சமீபத்தில் எடுக்கப்பட்ட வண்டிகளிலே அதை பொருத்த முடியாத நிலை ஏற்பட்டது. அதற்கு இப்போது மாற்றாக—ஏற்கனவே நாம் பொருத்தியவைகளிலே சிலவற்றிலே பழுது பார்க்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. இப்போது அதை பழுது பார்ப்பதற்கான ஏற்பாட்டை சேரன் போக்குவரத்து கழகம் ஏற்றுக்கொண்டு அதை படிப்படியாக செய்து வருகிறது. புதிதாக நாம் எடுக்கிற வண்டிகளுக்கு சேரன் போக்குவரத்துக் கழகம் தயார் செய்கிற அந்த வேகக் கட்டுப்பாடு கருவியை பொருத்துவதற்கு இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது,